**Publication: Tamil Murasu, pg 02**
**Date: 29 August 2020**
**Headline: Seniors felt more isolated during COVID-19 circuit breaker period**

# கொவிட்-19 கட்டுப்பாடு காலத்தில் முதியோரிடம் அதிக தனிமை உணர்வு

சிங்கப்பூரில் 55க்கும் 75க்கும் இடைப்பட்ட வயதுள்ள சுமார் 7,500 பேரை உள்ளடக்கிய மாதாந்திர ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது.

கொவிட்-19 காரணமாக கட்டுப்பாடுகள் நடப்பில் இருந்தபோது தனிமையில் இருக்க வேண்டிய சூழல் பலருக்கும் ஏற்பட்டது.

இதனால் மூத்த குடிமக்களைப் பொறுத்த வரையில் சமூக ரீதியில் அவர்களிடம் குறைந்த அளவு மனநிறைவு நிலவியது.

ஜனவரியுடன் ஒப்பிடுகையில் மே மாதம் சமூக மனநிறைவு சுமார் 4% குறைந்தது.

மற்றவர்களுடன் சேர்ந்து வாழும் மூத்த குடிமக்களைப் பொறுத்த வரை, மனநிறைவு அளவு, தனிமையில் வாழும் முதியோரிடம் கொவிட்-19 கட்டுப்பாடுகளுக்கு முன்பு நிலவிய அளவுடன் ஒத்திருக்கும் வகையில் குறைந்தது.

தனிமையில் வாழ்வோரிடம் மனநிறைவு இன்னும் குறைவாக இருந்தது. கொவிட்-19 பாதுகாப்பு இடைவெளி நிபந்தனை காரணமாக நண்பர்கள், சமூகத்திடம் இருந்து ஆதரவு பெறுவதும் அவர்களுக்குச் சிரமமானது.

கட்டுப்பாட்டுக் காலத்திற்குப் பிறகு ஜூலையில் மனநிறைவு அளவு மீண்டும் கூட தொடங்கியது. ஆனால் முன்பு இருந்த நிலையை அது எட்டவில்லை.

சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகத்தின் ‘வெற்றிகரமான முதிர்ச்சி காலம் பற்றிய ஆய்வு நிலையம்’ நடத்திய அந்த ஆய்வு முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டன.

சிங்கப்பூர் மக்கள்தொகை மூப்படைவதால் தனிமையில் வாழக்கூடிய, ஒற்றையராக வசிக்கக்கூடிய மக்களின் அளவு அதிகரிக்கும் என்று முன்னாள் நியமன நாடாளுமன்ற உறுப்பினரும் சமூகவியல் வல்லுநருமான பேராசிரியர் ஸ்ட்ராகன் தெரிவித்தார்.

இவர் நிர்வாகப் பல்கலைக்கழத்தின் வெற்றிகரமான முதிர்ச்சி காலம் பற்றிய ஆய்வு நிலையத்தின் இயக்குநராக இருக்கிறார். ஒவ்வொரு சிங்கப்பூரரும் சூழ்நிலைகள் எப்படி இருந்தாலும் கண்ணியமான முறையில் முப்படைவதற்குத் தோதாக சமூகத்தை மீண்டும் வடிவமைக்க வேண்டி இருக்கும் என்றும் இவர் தெரிவித்துள்ளார்.